பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

14 06 2026 SUNDAY 12.40 PM

ஆகாஷ்வாணி

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரானுடன், இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்த உள்ளார்.

2. ரத்த தானம் செய்ய மக்கள் தாமாகவே முன்வர வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கேட்டுக்கொண்டுள்ளார்.

3. சுகாதாரத்துறையில் கடந்த 12 ஆண்டுகளில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

4. ஈரானின் மறைந்த உயர் தலைவர் **Ayatollah Ali Khamenei**-யின் இறுதிச்சடங்கு அடுத்த மாதம் 4-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

5. உலகக் கோப்பை மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரானுடன் இணைந்து **Beaulieu** நகரில் உள்ள **Villa Kerylos**-ரில் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்த உள்ளார்.

ஜி-7 உச்சி மாநாட்டில் பங்கேற்க பிரான்ஸ் சென்ற பிரதமர், அந்நாட்டு அதிபருடன் பல்வேறு உலகளாவிய பிரச்சினையில் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து விவாதிக்க உள்ளார்.

முன்னதாக, நீஸ் நகரில், இரு தலைவர்களும் **Bharat Innovates** நிகழ்ச்சியை தொடங்கிவைக்கின்றனர்.

இந்தியாவை சேர்ந்த 120 புத்தாக்க தொழில் நிறுவனங்கள் இதில் கலந்துகொண்டு உலகளாவிய முதலீட்டாளர்களை ஈர்க்க உள்ளனர்.

பின்னர், திரு நரேந்திர மோடி, ஸ்லோவாக்கியா நாட்டுக்கு செல்ல உள்ளார்.

<<<<<<>>>>>>

இந்தியாவில் மிக அதிக காலமாக பிரதமராக பதவி வகித்ததற்கு தமக்கு வாழ்த்து தெரிவித்த செர்பியா அதிபர் அலெக்சாண்டருக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், செர்பியா உடனான உறவுகளை மேம்படுத்த இந்தியா உறுதிபூண்டிருப்பதாக கூறியுள்ளார்.

இனிவரும் காலங்களில் இருநாட்டு உறவுகள் மேலும் வலுப்பெறட்டும் என்று திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மக்களுக்கு தரமான மருத்துவ சிகிச்சை வழங்க மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கடந்த 12 ஆண்டுகளாக சுகாதாரத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

உலகிலேயே மிகப்பெரிய மருத்துவ காப்பீட்டுத் திட்டமான ஆயுஷ்மான் பாரத், மக்களுக்கு பெரிதும் பயனளித்துள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

சுகாதாரத்துறையில் கடந்த 12 ஆண்டுகளில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் 12 ஆண்டு சாதனை குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பிரதமர் திரு நரேந்திர மோடி

தலைமையிலான அரசின் திட்டங்கள் மூலம், நாட்டின் சுகாதார கட்டமைப்பு வலுப்பெற்றுள்ளதாக கூறியுள்ளார்.

சுகாதாரமான இந்தியா என்ற தொலைநோக்கு பார்வையில் ஆயுஷ்மான் பாரத் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், லட்சக்கணக்கான பயனாளிகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சை உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் மலிவு விலை மக்கள் மருந்தகம் மூலம் தரமான மருந்துகள் குறைந்த விலையில் விற்பனை செய்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

இ-சஞ்ஜீவினி போன்ற டிஜிட்டல் மருத்துவ ஆலோசனை முறையில் ஏராளமானோர் பயனடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தூய்மை இந்தியா இயக்கம் மூலம், நோய்கள் பரவுவதை தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

சுகாதார வசதிகளை வழங்குவதில் இந்தியா உலகிலேயே முன்னணி நாடாக திகழ்வதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மத்திய அரசின் திட்டங்கள் மூலம், மருத்துவ சேவை, மக்களுக்கு எளிதாக கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

அவசரகால மருத்துவ கிசிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் குடும்பத்தினருக்கு நிதி நெருக்கடி ஏற்படாத வண்ணம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு பியூஷ்கோயல் தெரிவித்துள்ளர்.

<<<<<<>>>>>>

ரத்த தானம் செய்ய மக்கள் தாமாகவே முன்வர வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கேட்டுக்கொண்டுள்ளார்.

உலக ரத்ததான கொடையாளர் தினம் இன்று கடைபிடிக்கப்படுவதையொட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், உயிருக்கு போராடும் நோயாளிகளை காப்பாற்றுவதில் ரத்த தானத்தின் பங்கு முக்கியமானது என்று கூறியுள்ளார்.

ரத்த தானம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய அவர், இதுதொடர்பான தவறான தகவல்களை நம்ப வேண்டாம் என்று தெரிவித்துள்ளார்.

’’மனித நேயத்தின் ஒரு துளி, ரத்த தானம் மூலம் உயிரை காப்பாற்றுவோம் என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும் என்று அவர் கூறியுள்ளார்.

ரத்த தானம் மூலம் உயிர்களை காப்பாற்றி வாழ்க்கையை மாற்றியமைக்க முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ரத்த மாற்றம் தேவைப்படும் நோயாளிகளை காப்பாற்றுவதற்கு ரத்த தானம் முக்கிய பங்கு வகிப்பதாக திரு ஜெ பி நட்டா குறிப்பிட்டுள்ளார்.

மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மக்கள் ரத்த தானம் செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

ரத்த தானம் மூலம் பல உயிர்களை காப்பாற்ற முடியும் என்று கூறிய அவர், அவர்களின் குடும்பத்தில் மகிழ்ச்சியை கொண்டுவர முடியும் என்று தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

மனதையும், உடலையும் ஒருநிலைப்படுத்துவதில் யோகா முக்கிய பங்கு வகிப்பதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் கூறியுள்ளார்.

தஜிகிஸ்தான் தலைநகர் **Dushanbe**-வில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், உலகமெங்கும் உள்ள லட்சக்கணக்கானோருக்கு யோகா பயனளித்து வருவதாக தெரிவித்தார்.

தஜிகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் **Sirojiddin** -வுடன் இருதரப்பு உறவுகள் குறித்து அவர் ஆலோசனை நடத்தினார்.

அப்போது, கொல்கத்தாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஹாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்துகொள்ள தஜிகிஸ்தானுக்கு திரு கீர்த்தி வர்தன் சிங் அழைப்பு விடுத்தார்.

<<<<<<>>>>>>

ஒடிஷாவில் அறுவடை திருநாளான ரஜ்பர்வ் இன்று கொண்டாடப்படுவதையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பருவமழை காலத்தை வரவேற்கும் வகையில் இந்த பண்டிகை கொண்டாடப்படுவதாக கூறியுள்ளார்.

பூமித் தாயையும், இயற்கையையும் போற்றும் வகையில் இந்த பண்டிகை பாரம்பரிய முறையில் கொண்டாடப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

அனைவரின் வாழ்க்கையில் வளமும், மகிழ்ச்சியையும் இந்த பண்டிகை கொண்டுவரட்டும் என்றும் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

தொழிலாளர் புள்ளியியல் தொடர்பான நிபுணர் குழுவின் தலைவராக பேராசிரியர் **Alakh Sharma** நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், தொழிலாளர் நலனுக்காக இந்த குழு வெளியிடும் தகவல்கள் பயன்படுத்தப்படும் என்று கூறியுள்ளது.

தொழிலாளர் புள்ளியியல் விவரங்களை துல்லியமாக தயார் செய்ய இந்தக்குழு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துள்ளது.

மனித மேம்பாட்டுக் கல்விக்கழகத்தின் இயக்குநராக பணியாற்றும் பேராசிரியர் **Alakh Sharma,** பொருளாதார நிபுணர் என்ற நிலையில் பிரபலமானவர்.

<<<<<<>>>>>>

ஈரானின் மறைந்த உயர் தலைவர் **Ayatollah Ali Khamenei**-யின் இறுதிச்சடங்கு அடுத்த மாதம் **4**-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலில், டெஹ்ரானின் இமாம் **Khomeini** தொழுகை மைதானத்தில் இறுதிச்சடங்கு நடைபெறும் என்று கூறியுள்ளது.

இரங்கல் ஊர்வலம் அடுத்த மாதம் **6**-ஆம் தேதி நடைபெறும் என்றும், **Qom** மற்றும் **Mashhad** புனித நகரங்களில் அஞ்சலி செலுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமத் **Bagher** வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்காவும், இஸ்ரேலும் பொதுமக்கள் மீதும், குழந்தைகள் மீதும் தாக்குதல் நடத்தி வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<<<>>>>>>

இலங்கை தலைநகர் கொழும்புவில் ஐந்தாயிரம் பரத நாட்டிய கலைஞர்கள் ஒரே இடத்தில் நடனமாடி உலக கின்னஸ் சாதனையை படைத்துள்ளனர்.

இந்தியா மற்றும் இலங்கையை சேர்ந்த பரத நாட்டிய கலை அகாடமிகள் இணைந்து இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தன.

பரதநாட்டிய கலையை இலங்கையில் பிரபலமாக்க இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய தூதர் திரு சந்தோஷ் ஜா, கின்னஸ் அமைப்பிலிருந்து உலக சாதனைக்கான சான்றிதழை பெற்றுக்கொண்டார்.

அப்போது பேசிய அவர், இருநாடுகளை சேர்ந்த பரதநாட்டிய கலைஞர்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், இலங்கை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர், துணை அமைச்சர்கள் சுந்தர் லிங்கம், மஹிந்தா ஜெயசிங்கே உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>>

இத்தாலி தலைநகர் ரோமில் குடிபெயர்ந்தவர்களுக்கு ஆதரவாகவும், எதிர்ப்பு தெரிவித்தும் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குடிபெயர்வதை தடுப்பதற்கு நாடாளுமன்றத்தில் சட்டங்கள் கொண்டுவருவது தொடர்பாக விவாதம் நடத்துவதற்காக 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கோரிக்கை விடுத்தனர்.

இந்த சட்டம் நிறைவுற்றப்பட்டால், வெளிநாடுகளிலிருந்து இத்தாலியில் குடிபெயர்ந்தவர்கள் தாயகம் திரும்புவதற்கு அனைத்து உதவிகளையும் வழங்க வழிவகை செய்ய உள்ளது.

இதனிடையே, 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இத்தாலியில் குடிபெயர்ந்தவர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்த அப்பகுதிகளில் பலத்த காவல் போடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

மியான்மரில் நேற்றிரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் இது 3 புள்ளி எட்டாக பதிவானது.

இந்த நிலநடுக்கத்தால் உயிர்சேதமோ, பொருட்சேதமோ குறித்த தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

<<<<<<>>>>>>

உலகக் கோப்பை மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

பர்மிங்ஹாமில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

முன்னதாக, பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் பங்களாதேஷ் — நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

---------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்காட்லாந்து 1-0 என்ற கோல் கணக்கில், Haiti-ஐ வென்றது.

ஆஸ்திரேலியா 2-0 என்ற கோல் கணக்கில் துருக்கியை வென்றது.

**<<<<<<<END>>>>>>>**